


தனி பிரதி
ரூ.10/-

PORIYIYAL KADHIR



# பொறியியல் கதிர்

கதிர் 46 | பாரிப்பு 3 | திருவள்ளுவர் ஆண்டு 2045 | நவம்பர் 2015



## Happy Children's Day

நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

**TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD**
CHEPAUK, CHENNAI - 600 005.

# காஞ்சிபுரம் கிளை பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்





## பொதுச் செயலாளர் மடல்

மடல் - 3 (2015 - 2016)



# தொடரும்
# நம் பயணம் .......

### அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

நமது போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. 13.08.2015 அன்று 72 உதவிப்பொறியாளர்களை பணி வரன்முறைப்படுத்த வழங்கப்பட்ட அரசாணையை அமுல்படுத்த தலைமைப்பொறியாளர் (பொது) அவர்கள் தொடர்ந்து மறுத்துவருகிறார். மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இட்ட அரசாணையை அமுல்படுத்த மறுக்கும் வானளாவிய அதிகாரம் படைத்த ஒரே தலைமைப்பொறியாளர் நமது மரியாதைக்குரிய திருவாளர். திருமாறன் ஒருவராகத்தான் இருக்கமுடியும்.

சங்கத்தின் மூலமாக பலமுறை இந்த அரசாணையை அமுல்படுத்த வலியுறுத்தப்பட்டது. அந்த அரசாணையில் உள்ள உதவிப்பொறியாளர்கள் ஒரு மாதத்திற்கு முன்பு இவரை நேரில் சந்தித்து அரசாணையை அமுல்படுத்த வலியுறுத்தினார்கள். இரண்டொரு நாளில் அமுல்படுத்திவிடுவதாக கூறியிருக்கிறார். ஆனால் எதுவும் நடக்கவில்லை. அரசாணை வெளியிடப்பட்டுவிட்டது. அதற்கு பிறகு அதை தடுப்பதற்கு இவருக்கு அதிகாரம் கிடையாது என்பது இவருக்கே தெரியும்.

மீண்டும் அந்த அரசாணையில் உள்ள உதவிப்பொறியாளர்களை அழைத்துக்கொண்டு 28.10.2015 அன்று சங்கத்தின் சார்பாக மாண்புமிகு அமைச்சரை சந்தித்து மேற்கண்ட அரசாணையை அமுல்படுத்த தலைமைப்பொறியாளருக்கு அறிவுரை வழங்க கோரினோம். அரசாணையை அமுல்படுத்துவதாக கூறினார். அதற்கு பிறகு அனைவரும் மரியாதைக்குரிய பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளரை சந்தித்து விவரங்களை கூறினோம். இந்த பிரச்சனையை ஏற்கனவே அவரிடம் கூறியதை நினைவுக்கூர்ந்தார். உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்

தானாக நடக்கவேண்டிய கோப்புகளை முடக்கி வைத்து நிர்வாக சீர்க்கேட்டை உருவாக்கும் சகல வல்லமை பொருந்திய ஒரே தலைமைப்பொறியாளர் இவராகத்தான் இருக்க முடியும். 11 கோப்புகள் தேங்கிக்கிடக்கும் மிக மோசமான நிர்வாகத்தை இவர் ஒருவரால் மட்டுமே தர முடியும். இத்தனை கோப்புகள் தேங்கிக்கிடப்பது இவருக்கு அவமானம் என்பதைக்கூட இவர் உணரவில்லை. அல்லது உணர்ந்தும் கண்டு கொள்ளாமல் இருக்கிறாரா என்று தெரியவில்லை. பலமுறை வலியுறுத்தியும் எந்த

கோப்பும் நகரவில்லை. யார் என்னை கேட்கமுடியும் என்கின்ற ஒரு போக்குத்தான் இவரிடம் காணப்படுகிறது.

பொதுவாக எல்லோரும் தான் வகிக்கும் பதவியில் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்றுதான் நினைப்பார்கள். குறிப்பாக தலைமைப்பொறியாளர் (பொது) பதவி நிறைய பேருக்கு நன்மைகள் செய்ய கிடைக்கும் ஒரு அரிய வாய்ப்பு. ஆனால் சிலர் இதை தங்களுடைய தவறான கொள்கைகளுக்கு வடிகாலாக பயன்படுத்தி கொள்கிறார்கள். அதிகார துஷ்பிரயோகம் செய்து ஒரு இனத்திற்கு கெடுதல் செய்யும் போக்கு கண்டிக்கத்தக்கது.

பொறியாளர் சங்கம் இரண்டு வழக்குகள் தொடுத்துள்ளது. 26.2.2006 அன்று தொழில்நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்ற 21 உதவிப் பொறியாளர்களை மீண்டும் தொழில்நுட்ப உதவியாளர்களாக பதவி இறக்கம் செய்ய வேண்டும் என்று பொறியாளர் சங்கம் தொடுத்த வழக்கில் நீதிமன்ற தடையாணை பெற்றிருந்தோம். இந்த வழக்கை மீண்டும் கொண்டு வர Miscellaneous Petition போட்டிருக்கிறார்கள்.

இன்னொரு வழக்கு தொழில்நுட்ப உதவியாளர்களாக இருக்கும் போது பகுதி நேர பட்டப் படிப்பு படித்து இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு பெற்று பின்பு உதவிப் பொறியாளர்களாக பணியமர்வு ஆணை பெற்ற 72 உதவிப் பொறியாளர்களுக்கு எதிரான வழக்கு. இது 2007, ஆம் ஆண்டு தொடுத்த வழக்கு. அரசு ஆணை எண். 1 சம்பந்தப்பட்ட நான்கு வழக்குகளை ஒருங்கிணைத்து கடந்த 24.12.2014 அன்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அதில் ஒரு வழக்கின் மீது மேல்முறையீடு செய்ய Delay Condone Petition போட்டிருக்கிறார்கள். இந்த வழக்குகளை உரிய முறையில் எதிர் கொள்வோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

(த. முருகேசன்)

பொதுச் செயலாளர்

**D. முருகேசன்,** பொதுச் செயலாளர்
செல்பேசி எண் 9444 999 588, 988 444 98 97
E.mail: d.murugavelsivan@gmail.com

# 17.10.2015 அன்று சென்னையில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் 17.10.2015 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை சேப்பாக்கம் பொறியியல் இல்லம் பொறியாளர் சி.பி. சண்முகம் அரங்கில் மாநிலத் துணைத் தலைவர் பொறியாளர் எஸ். பாஸ்கரன் அவர்கள் தலைமையிலும், பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

மாநிலத் தலைவர், மாநிலத்துணைத் தலைவர் ஆகியோர் தங்களுடைய உரையில் சங்க நடவடிக்கைகள் பற்றி பேசினர். பொதுச்செயலாளர் தன்னுடைய உரையில் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார். மேலும் சங்க வழக்குகள் சம்பந்தமாகவும் விரிவாக பேசினார்.

மையச்சங்க பொறுப்பாளர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தார்கள்.

**தீர்மானங்கள்:-**

1. 19.12.2015 அன்று கிழக்கு மண்டலத்தின் சார்பாக புதுக்கோட்டையில் மாநிலச் செயற்குழு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.
2. திரு.திருமாறன் தலைமைப்பொறியாளர் (பொது) அவர்களின் ஒருதலைப்பட்சமான போக்கு, நிர்வாக திறமையின்மை ஆகியவற்றை விளக்கி ஒரு குறும்புத்தகம் வெளியிடுவது என தீர்மானிக்கப்பட்டது.
3. திரு.திருமாறன் தலைமைப்பொறியாளர் (பொது) அவர்களை பணியிட மாற்றம் செய்யக்கோரியும், தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் நிலுவையில் உள்ள 11 கோப்புகளை முடிக்க கோரியும் நவம்பர் மாத இறுதியில் சென்னையில் வாயிற்கூட்டம் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.

## நன்கொடை

தமிழ்நாடு பொறியியல் விருதுநகர் கிளை உறுப்பினர் பொறியாளர். கு.பெருமாள், உதவி செயற்பொறியாளர் அவர்கள் தன் மகள் திருமண நன்கொடையாக ரூ. 1000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) மையச் சங்கத்திற்கு வழங்கியுள்ளார்.

தமிழ்நாடு பொறியியல் சங்கம் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

பெறுநர்,

முதன்மை செயலர் அவர்கள்,
பொதுப்பணித்துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை-9.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்,
புனித ஜார்ஜ் கோட்டை,
சென்னை - 600 009.

ஐயா,

பொருள்: பணியமைப்பு - பொதுப்பணித்துறை - தமிழ்நாடு பொறியியல் பணித் தொகுதி - தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்து இளநிலைப் பொறியாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டு பின்னர் பணிமாற்றம் மூலம் முன் தேதியிட்டு உதவிபொறியாளர்களாக (சிவில்) ஷ பணியமர்த்தப்பட்டவர்கள் - உதவி பொறியாளர் பதவியல் பணிவரன்முறை செய்தல் - அரசு ஆணை வெளியிட்டது -சம்மந்தமாக

பார்வை: அரசாணை (நிலை) எண்:155/பொப(பி2) துறை நாள்.13/08/2015.

பார்வையில் கண்ட அரசாணையில் தமிழ்நாடு பணி விதித்தொகுப்பு தொகுதி ஒன்றில், தமிழ்நாடு மாநில மற்றும் சார் நிலைப் பணிகளுக்கான விதிகள் பகுதி II இல் உள்ள பொது விதிகளில் விதி 48-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி இளநிலைப் பொறியாளர்களாக பதவி உயர்வு பெறும் முன்னர், அதாவது தொழில் நுட்ப உதவியாளர் பதவியிலிருந்தபொழுதே பொறியியல் பட்டப் படிப்பில் தேர்ச்சி பெற்று இளநிலைப் பொறியாளர்களாக பதவி உயர்வும் பெற்று பின்னர் முன் தேதியிட்டு பணி மாறுதல் மூலம் உதவிப்பொறியாளர்களாக (சிவில்) பணி நியமனம் செய்யப்பட்ட 72 நபர்களின் பணியினை உதவிப்பொறியாளர் (சிவில்) பதவியில் பணிவரன்முறை செய்ய ஏதுவாக தமிழ்நாடு ஆளுநர் ஆணைக்கிணங்க மேற்கண்ட 72 நபர்களின் பணியினை உதவிப்பொறியாளர் (சிவில்) பதவியில் வரன்முறை செய்ய அரசு ஆணையிட்டுள்ளது.

**மேற்கண்ட அரசாணை வெளியிட்டு சுமார் மூன்று மாத காலமாகியும் இன்னும் அமுல்படுத்தபடவில்லை. எனவே 72 நபர்களின் பணியினை, உதவிப்பொறியாளர் (சிவில்) பதவியில் வரன்முறை படுத்தியிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா, அவர்களின் ஆணையை உடனடியாக அமுல்படுத்த முதன்மை தலைமைப்பொறியாளர் அவர்களுக்கு அறிவுரை வழங்க பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.**

(த.முருகேசன்)
பொது செயலாளர்,
தமிழ்நாடு பொறியியல் சங்கம்,
சென்னை - 5.

**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS**
**(Special Original Jurisdiction)**
**Friday, the sixteenth day of October Two Thousand Fifteen**
**PRESENT**
**THE HON'BLE MR. JUSTICE M. SATHYANARAYANAN**
**WP NO. 33630 to 33632 of 2015**
**And MP. 2& 2/2015**

M.S. HEMALATHA (PETITIONER IN WP. 33630/15 IN MP. 2/15)
C. KALYANASUNDARAM (PETITIONER IN WP. 33631/15 IN MP. 2/15)
M. VASANTHI (PETITIONER IN WP. 33632/15 IN MP. 2/15)

Vs

1 THE GOVERNMENT OF TAMIL NADU (RESPONDENTS IN ALL THE PETITIONS) REPRESENTED BY ITS SECRETARY, FINANCE DEPARTMENT, FORT ST. GEORGE, CHENNAI – 600 009.

2 THIRU K. SHANMUGAM, I.A.S
PRINCIPAL SECRETARY,
TO GOVERNMENT OF TAMILNADU,
FINANCE DEPARTMENT, FORT ST.
GEORGE, CHENNAI – 600 009.

3 THE ENGINEER- IN – CHIEF (WRO) &
CHIEF ENGINEER (GENERAL), PUBLIC WORKS
DEPARTMENT, CHEPAUK, CHENNAI – 600 005.

Writ petitions under Article 226 of the Constitution of India Praying that in these circumstances stated therein and in the respective affidavits filed therewith the High Court will be pleased to issue a WRIT OF CERTIORARI

(A) (i) Calling for the records on the file of 1st respondent relating to the issue of 2nd respondents Letter No. 53137/pay cell/2015-1 dated 25.09.2015 and quash the same (WP. 33630/2015);

(ii) Calling for the records on the file of 1st respondent relating to the issue of 2nd respondents Letter No. 53137/pay cell/2015-1 dated 25.09.2015 and quash the same (WP. 33631/2015);

(iii) Calling for the records on the file of 1st respondent relating to the issue of 2nd respondents Letter No. 53137/pay cell/2015-1 dated 25.09.2015 and quash the same (WP. 33632/2015);

(B) (i) To pass an interim order staying the operation of the impugned order issued by the 1st respondent in Letter No. 53137/pay cell/2015-1 dated 25.09.2015 (in MP. 2/2015) pending disposal of this (WP. 33630/2015);

(ii) To pass an interim order staying the operation of the impugned order issued by the 1st respondent in Letter No. 53137/pay cell/2015-1 dated 25.09.2015 (in MP. 2/2015) pending disposal of this (WP. 33631/2015) and

(iii) To pass an interim order staying the operation of the impugned order issued by the 1st respondent in Letter No. 53137/pay cell/2015-1 dated 25.09.2015 (in MP. 2/2015) pending disposal of this (WP. 33632/2015) respectively.

Order: These petitions coming on for orders upon perusing the petitions and the respective affidavits filed in support thereof and upon hearing the arguments of M/S. N. SUBRAMANIYAN, Advocate for the petitioner in all the petitions and of MR. V.SRINIVASAN, Additional Government Pleader, on behalf of the Respondents in all the petitions the court made the following order:-

Learned counsel appearing for the petitioners would submit that the petitioners are in the services of public works Department and G.O.MS.No. 242, Finance (Pay cell) Department dated 22.7.2013 came to be passed to implement the recommendations of the pay Grievance Cell and it is also subject to the result of the order dated 15.10.2012 in W.A.No. 504 of 2011 etc. batch. The said Writ Appeal was disposed of by issuing certain directions and contracty to the said directions, the impugned administrative instruction in the form of letter dated 25.9.2015 came to be issued. In the light of the same, the third respondent is left with no other option to comply with the same. Hence, the learned counsel appearing for the petitioner prays for appropriate orders.

2. This court heard the submissions of the learned counsel appearing for the petitioner and Mr. N. Srinivasan, learned Additional Government Pleader, who accepts notice on behalf of receipts.

3. In the light of the above Facts and circumstances, this Court feels that prima facie case has been made out for grant of interim order.

4. Notice of motion returnable by 30.11.2015. Private notice is also permitted. There will be an order of adinterim stay till 30.11.2015. In is made clear that this interim order is subject to the result of the Writ Petitions and the petitioners cannot claim any equity on the basis of this order at the time of final disposal of the Writ Petitions.

Call the matter on 30.11.2015

-sd/-
16/10/2015
/TRUE COPY/
Sub-Assistant Register (Statistics/C.S.)
High Court, Madras – 104.

TO

1 THE GOVERNMENT OF TAMILNADU
REPRESENTED BY ITS SECRETARY, FINANCE
DEPARTMENT, FORT ST. GEORGE, CHENNAI – 600 009.

2 THE ENGINEER- IN – CHIEF (WRO) &
CHIEF ENGINEER (GENERAL), PUBLIC WORKS
DEPARTMENT, CHEPAUK, CHENNAI – 600 005.

C.C to M/S.N. SUBRAMANIYAN Advocate SR. NO. 15822.
The Government Advocate, High Court, Madras – 104.

Order
in
WP NO. 33630 to 33632 of 2015
and MP. 2 & 2/2015
Date: 16/10/2015

From 26.2.2001 the Registry is issuing certified
copies of the Interim Orders in this format
SL 19.10.2015

# Wedding Invitation

**Mrs. B. Indira**

(Syndicate Bank, Nagercoil)

&

**Mr.P. Sasikumar, B.E**

**Assistant Executive Engineer, PWD-WRO, Nagercoil**

**"VISAK" 1/200, CSI Church Street, Christopher Nagar, Nagercoil - 3**

**Cell: 94434 50621, 94427 10421**

***Cordially invite your esteemed presence with family***

***on the auspicious occasion of the marriage***

***of our son***

**K.S. Praveen, B.E.,**

(Senior Quality Analyst, Relationship Science, Chennai)

with

**M. Anusha, B.E., MBA.,**

(Consultant, Transsys Solution Ltd, Chennai)

D/o Mrs. K. Saraswathy Murugan & Mr. K. Murugan, "Iyyappa Bhavanam" No. 4,

Premier Studio Street, Meenakshipuram, Nagarcoil-1

**on Sunday, 6 th December 2015,**

**at Udupi International "Sarvamangala" Thirumana Mandapam**

**Vadasery, Nagercoil**

**Muhurtham: Between 11.00 a.m. to 11.45 a.m.**

**Sweekaranam: 9.45 a.m**

**Reception: 6th December 2015, from 6.00 pm to 8.00 pm**

**at Udui International "Sarvamangala" Thirumama Mandapam**

**Vadasery, Nagercoil**

***With best compliments from:***

**Frients & Relatives**

Finance (PC) Department
Fort St.George,
Chennai-600 009

Letter No.53137/Pay Cell/2015-1/dated:25.09.2015

From
Thiru.K.SHANMUGAM,IAS.,
Principal Secretary to Government.

To

All Additional Chief Secretaries/ Pricipal Secretaries / Secretaries to Government, Chennai-9
The Secretary Legislative Assembly, Secretariat, Chennai-9
The Secretary to the Governor, Chennai-32
The Comptroller, Governors Household, Raj Bhavan, Chennai-32
The Secretary to the Governor, Guindy, Chennai-32
The Governor's Secretariat , Raj Bhavan, Guindy, Chennai-32
All Departments of Secretariat, (OP/ Bills), Chennai-9
All Heads of Department.
All Collectors / All District Judges / All Chief Judicial Magistrates
The Principal Accountant General (Accounts & Ertitlements), Chennai-18
The Principal Accountant General (Audit-1) Chennai-18
The Accountant General (Audit-II) Chennai-18
The Accountant General (CAB), Chennai-9/ Madurai.
The Register General, High Court, Chennai - 104.
The Chairman, Tamilnadu Public Service Commission, Chennai - 3.
The Registrar of all Universities in TamilNadu
The Commissioner of Treasuries and Accounts, Chennai-15
The Director of Pension, DMS Complex, Chennai-6
The Director of Local Fund Audit, Chennai-108
The Pension Pay Officer, Chennai-600 006
The Pay and Accounts Officer, Secretariat, Chennai-9
The Pay and Accounts Officer, (North/South/East) Chennai-1/35/8
The Pay and Accounts officer, Madurai- 625 001
All Treasury Officers / Sub Treasury Officers.
The Commissioner of Tribunal for Disciplinary Proceedings,
No.6, Manickeswari Road, Chennai-10

The Commissioner, Corporation of Chennai / Madurai/Coimbatore/ Tiruchirapalli/Salem/Tirunelveli, Tuticorin, Vellore, Tirupur, Erode,
All State Owned Corporations and Statutory Boards
All Divisional Development Officers /Revenue Divisional officers / Tahsildars
All Block Development Officers/ Municipal Commissioners
All Chief Educational Officers / Panchayat Union Commissioners.
The Project Co-ordinator, Tamil Nadu Integrated Nutrition Project, No.570, Anna Salai, Chennai-18
All Recognised Service Associations.

Sir,

Sub: Contempt Petition No.350 of 2015 in W.A. No.810 of 2012 filed by Thiru. R.Ravi Raj, General Secretary, Association of Engineers - Dismissed by the Hon'ble Division Bench - Review of Government Instructions issued with reference to admissibility of higher pay scales to the Assistant Engineers and other equivalent posts-Further Instructions - Regarding.

Ref:-
1) G.O.Ms.No.234, Finance (Pay Cell) Department, dated.01.06.09
2) G.O. Ms.No. 71, Finance (Pay cell) Department, dated:26.02.11
3) G.O.Ms.No.242, Finance (Pay Cell) Department, dated: 22.07.13
4) Government Letter No.46373/PC/2013-1, dated:26.08.13
5) Judgement order of the Hon'ble Division Bench of Madras High Court dated 27.02.2014 in W.A. Nos.504 of 2012 and other batch cases and W.P. Nos.13580 of 2011/W.P. No.21525 of 2013 and other batch cases.
6) Government Letter No. 46373/PC/13-8, dated 27.03.14
7) Government Letter No.27670/CMPC/14-1 dated 28.05.14
8) Government Letter No.44961/CMPC/14-1 dated.20.11.14

*******

I am to invite attention to the references cited,

2) In the reference fifth cited, the Hon'ble Division Bench of Madras High Court in its order dated 27.02.14 in W.A. Nos.504 of 2012 and other batch cases among others, in para 51(V) has directed that the implementation of the orders issued in the Government Order second and third cited in so for as it affects any category of Government Servants/ Pensioners / Family Pensioners which are not implemented as on today shall not be implemented till fresh decision is taken.

3) In the reference sixth cited, necessary clarification has been issued to the effect that there shall not be any reduction in the pay of employees and pension of Pensioners/Family Pensioners pursuant to the orders issued in the Government orders second and third cited and the Pay and Accounts Officers were requested

to admit the pay bills of the employees and in the case of Pensioners / Family Pensioners without any reduction in pay / Pension / Family Pension to the Pensioners / Family Pensioners till further orders from Government.

4) In the reference seventh cited, it was subsequently clarified that the instructions issued in the Government letter sixth cited is also applicable to all those employees promoted after the issue of Government orders second and third cited. It was also instructed to admit the pay bills presented by the Drawing and Disbursing officers for fixation of pay of Assistant Engineers, Assistant Executive Engineers, and Executive Engineers in PWD, Automobiles Engineers in Motor Vehicle Maintenance Department and other equivalent posts in other departments in the higher scales of pay as per One Man Commission recommendations until further orders from Government.

5) In the reference eighth cited, based on the clarification sought for by the Engineer-in-Chief (WRO and Chief Engineer (General), PWD Department, it was clarified that the Assistant Engineers appointed by direct recruitment through TNPSC are not entitled for the higher pay scale clarified in the Government letter sixth cited. Further, it was also pointed out that the Assistant Engineers appointed by transfer and by direct recruitment from the waiting list are entitled for fixation of pay in PB2 at Rs.9300-34800 + Grade pay Rs.5100 as ordered in G.O. Ms.No.242, Finance (pay Cell) Department, dated 22.07.2013

6) In the meantime, the Association of Engineers filed Contempt Petition No.350 of 2015 praying to punish the respondent for the disobedience of the order dated 27.2.2014 passed by the Hon'ble Division Bench of Madras High Court in W.A.No.810 of 2012 and other batch cases following the clarification issued in Government letter eighth cited.

7) The above Contempt Petition was contested by Government by engaging the services of the learned Advocate General of Tamil Nadu. The Hon'ble High Court Division Bench in its order dated 7.9.2015 in Contempt Petition No.350 of 2015 has dismissed the contempt petition filed by the Association of Engineers as withdrawn.

8) In this connection, it is pointed out that in TNPSC Notification No.8/2014, dated 24.03.2014 applications were called for to the post of Assistant Engineer in the pay scale of Rs.9300-34800+Grade Pay Rs.5100 pursuant to G.O.Ms.No.242 Finance (PC) Department dated 22.07.2013 Similarly, in the Notification No.10 (A)2015 dated:5.8.2015, the pay scale of Assistant Engineers has been appropriately indicated as Rs.9300-34800+Grade PayRs.5100 only for the post of Assistant Engineer in the Highways Department. As such, the new recruits appointed in the post of Assistant Engineer after the issue of G.O. Ms.No.242, Finance (PC) Department, Dated 22.07.2013 are entitled only to the pay scale of Rs.9300-34800+Grade Pay of Rs.5100 as there is no anomaly in the pay scale of new recruits. further the new recruits to

the post of Agricultural officer in the Agricultural Department and Horticulture Officer in the Horticulture Department after 22.07.2013 were erroneously granted a higher pay scale of Rs.15600-39100+Grade Pay of Rs.5400. It has also been ordered to refix the pay of such new recruits appropriately in PB2 Rs.9300-34800+Grade Pay of Rs.5100 and recover excess amount paid after giving due notices to such employees.

9) Based on the discrepancies brought to notice of the Court by the Association of Engineers in the mode of fixation of pay to the new recruits to the post of Assistant Engineers and equivalent categories, it was assured that proper guidelines will be issued so that all new recruits shall be granted an appropriate uniform pay scale without any discrimination and that as the new recruits have no anomaly as that of the existing incumbents who are enjoing the higher scale benefits by virtue of Court Orders which is being contested by the Government in the Supreme Court of India in the SLP (c) Nos.35679 to 35838 of 2014.

10) Considering the submission made before the Hon'ble Division Bench of Madras Hight Court, Government has decided to clarify the applicable uniform pay scales to the new recruits in the category of Assistant Engineer and their equivalent posts in other departments. Accordingly, I am to clarify that the employees appointed by direct recruitment or recruitment by transfer or promotion to the categories (52 Nos.) of posts covered by the G.O. Ms.No.242. Finance (PC) Department dated 22.7.2013, on or after the date of the Government Order are entitled only to the pay scale indicated against each in the above said Government Order as there is no question of pay anomaly to the new recruits and the higher pay scales granted to the existing incumbents is beihng contested by the Government in the Hon'ble Supreme Court of India.

11) I am to request that all the Departments of secretariat / Heads of Departments shall ensure that direct recruitment after 22.7.2013 to the categories mentioned in the G.O. Ms.No.242, Finance (Pay Cell) Department, dated 22.7.2013 is made appropriately with reference to the pay scales indicated in the abovesaid Government Order.

12) Any lapse in following the above instructions shall be viewed seriously and responsibility be fixed on the Heads of Departments concerned.

Yours faithfully

/sd/-

for Principal Secretary to Government

Copy to:

The Secretary, Tamil Nadu Public Service Commission, Chennai

The Personnel and Administrative Reforms Department, Secretariat, Chennai-9

Stock File / Spare Copy

நன்றி தினமலர் 09.10.2015

# நிர்வாகமே முடங்கிப்போச்சு

## இது, பொதுப்பணித்துறை புகைச்சல்

பொதுப்பணித்துறையில் பி.இ. முடித்த இன்ஜினியர்கள் மற்றும் டிப்ளமா முடித்து பணியில் சேர்ந்தவர்களுக்கு இடையிலான சம்பளத்தில் பல முரண்பாடுகள் உள்ளன. டிப்ளமா இன்ஜினியர்கள் அவ்வப்போது தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி வருகின்றனர். இதில் சில கோரிக்கைகள் மீது சாதகமான உத்தர்வை அரசு பிறப்பித்துள்ளது. இந்த உத்தரவுகளை செயல்படுத்த வேண்டியது பொதுப்பணித்துறையின் கடமை.

இதற்கான கோப்புகள் தலைமை பொறியாளர் அலுவலகத்தில் பல மாதங்களாகவே பெண்டிங் வைக்கப்பட்டுள்ளது. இது, தமிழ்நாடு பொறியாளர் சங்கத்தினரை கடும் அதிருப்தி அடைய செய்துள்ளது.

'என்னதான் நடக்குது உங்க துறையிலே' என்று சங்க பொதுச்செயலாளர் முருகேசனிடம் கேட்டதும், ''பதவி உயர்வு பெற்ற உதவி பொறியாளர்களை பணி வரன்முறை படுத்தும் கோப்பு, இளநிலை பொறியாளர்களை பணிவரன் முறைப்படுத்துவது, டிப்ளமா முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் மற்றும் வரைவாளர் பதவி உயர்வு அளிப்பது, காலியாக இருக்கும் தொழில் நுட்ப உதவியாளர் பதவிகளை நிரப்புவது உட்பட 11 கோப்புகள் தலைமை பொறியாளர் முடிவு எடுப்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. ஆனால், அவரோ, அந்த கோப்புகளை தொடவே இல்லை. எதற்காக பெண்டிங் வைத்திருக்கிறார் என்பதும் புரியவில்லை. இதனால் பல பணிகள் முடங்கி கிடக்கின்றன'' என்றார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், ''இந்த பிரச்னை தொடர்பாக பொறியாளர் சங்கத்தின் கூட்டத்தில் கண்டன தீர்மானமும் கொண்டு வரப்பட்டது. அந்த தீர்மானத்தில், நிர்வாக திறமையற்ற, ஒருதலை பட்சமாக செயல்படும் தலைமை பொறியாளரை பணியிட மாற்றம் செய்ய வேண்டும்.

பொதுப்பணித்துறையில் 26 உதவி செயற்பொறியாளர் காலிப் பணியிடங்களுக்கு 52 பேருக்கு பணி நியமனம் வழங்கி ஹைடெக் மோசடி செய்திருக்கிறார். இதற்காக தலைமை பொறியாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நேரடியாகவே தலைமை பொறியாளரை குற்றம் சாட்டி இருந்தனர்.

இவ்வளவு நடந்தும் இதுவரையிலும் எந்த நடவடிக்கையும் இல்லை. இதனால், அடுத்த கட்டமாக தலைமை பொறியாளரை கண்டித்து மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடத்த பொறியாளர் சங்கம் முடிவு எடுத்துள்ளது. மொத்தத்தில் தலைமை பொறியாளரால் பொதுப்பணித்துறை நிர்வாகமே முடங்கி கிடக்கிறது. துறை ஊழியர்கள் மத்தியில் பெரும் புகைச்சல் ஏற்பட்டுள்ளது'' என்றார்.

# இயங்கும் உலகம்

## கடலூர் கிளை

கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட கிளையின் பொதுக்குழு மற்றும் கிளையின் 2015-16ஆம் ஆண்டு பொறுப்பாளர்கள் தேர்வும் 02.08.2015 அன்று காலை 11.00 மணியளவில் பொதுப்பணித்துறை வளாகம், விழுப்புரத்தில் நடைபெற்ற கூட்டம் பொறி.B.அசோகன், அவர்களின் தலைமையில் இறைவணக்கத்துடன் இனிதே துவங்கப்பட்டது. பொறி.பொன்.மாணிக்கம், அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பின்னர் முன்னாள் குடியரசு தலைவர் டாக்டர்.A.P.J.அப்துல் கலாம்,அவர்களின் மறைவிற்கும், இசைமேதை திரு.M.S.விஸ்வநாதன் அவர்களின் மறைவிற்கும், மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. கிளையின் தலைவர் பொறி.B.அசோகன், அவர்கள் தலைமை உரையாற்றினார்கள்.

கிளை சங்க நடவடிக்கைகளை கிளையின் செயலாளர் பொறி.நா.பாஸ்கர், அவர்கள் விரிவாக எடுத்துரைத்தும், உறுப்பினர்கள் முழு ஈடுபாடுடன் சங்க கூட்டத்தில் கலந்துக்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொண்டார். கிளையின் பொருளாளர் பொறி.S.கணேசன் அவர்கள் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்து அவையின் ஒப்புதலைப்பெற்றார். உறுப்பினர்களின் கருத்தாக திரு.G. விஜயகுமாரன் அவர்கள் முன்னாள் மாநிலத் தலைவர், திரு.S.கிருஷ்ணசாமிஅவர்கள் முன்னாள் பொருளாளர், திரு.G.சிவக்குமார்அவர்கள், முன்னாள் வடக்கு மண்டல செயலாளர்,திரு.A.குமார் ஒட்டுநர் ஆகியோர்களின் கேள்விகளுக்கு சிறப்பு அழைப்பாளராக கலந்துக்கொண்ட வடக்கு மண்டல செயலாளர் திரு.D. சந்திரன் அவர்கள் தெளிவாகவும், விரிவாகவும் விளக்கம் அளித்தார்.

அதன் பின்னர் 2015-16ஆம் ஆண்டிற்கான கிளைப்பொறுப்பாளர்கள் தேர்தல் வடக்கு மண்டல செயலாளர் தலைமையில் நடைப்பெற்றது. கீழ்கண்ட பொறியாளர்கள் கிளையின் பொறுப்பாளர்களாக கிளையின் உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | - | பொறியாளர். கோ.விஜயகுமாரன் |
| உபதலைவர் | - | பொறியாளர் பொன்.மாணிக்கம் |
| செயலாளர் | - | பொறியாளர் நா.பாஸ்கர் |
| இணைச்செயலாளர் 1 | - | பொறியாளர் எஸ் .கிருஷ்ணசாமி |
| இணைச்செயலாளர் 2 | - | பொறியாளர் எஸ் .கணேசன் |
| பொருளாளர் | - | பொறியாளர் இரா.விஜயா |

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1) பொதுப்பணித்துறையில் உள்ள மண்டலம், வட்டம், கோட்டம் ஆகிய அலுவலகங்களில் காலியாக உள்ள முதுநிலை வரைதொழில் அலுவலர், வரைத்தொழில் அலுவலர், உதவி வரைத்தொழில் அலுவலர் ஆகிய பணியிடங்கள் உடனடியாக நிரப்புவதற்கு தமிழக அரசினை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

2) உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பட்டியலினை ஒப்புதல் பெற உரிய நடவடிக்கை எடுக்குமாறு மத்திய சங்கத்தினை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

3) பட்டயம் படித்த பணி ஆய்வாளர், பாசன உதவியாளர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர், இளநிலை வரைதொழில் அலுவலர் பதவியை விரைந்து பெற்றுத்தர உரிய நடவடிக்கை எடுக்குமாறு இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

4) பொதுப்பணித்துறையில் இயங்கி வரும் ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு தொழில் நுட்ப உதவியாளர் பணியமர்வு பெறுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொண்டு அப்பணியிடங்களை பெற்றுத்தர இக்கிளை கேட்டுக்கொள்கிறது.

5) இந்தியத்திருநாட்டின் முன்னாள் குடியரசு தலைவர் அனைத்து மக்களின் அன்பையும், சீரிய மதிப்பையும் பெற்றவருமான டாக்டர்.A.P.J.அப்துல் கலாம்அவர்களின் மறைவிற்கும், இசைமேதை திரு.M.S.விஸ்வநாதன் அவர்களின் மறைவிற்கும், இப்பொதுக்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

## காஞ்சிபுரம் கிளை

தமிழ்நாடு பொறியியல் சங்கம், காஞ்சிபுரம் கிளையின் பொதுக்குழு கூட்டம் 10.10.2015 சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் காஞ்சிபுரம் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் கிளைச் சங்கத் தலைவர் பொறி.L. பிலோமின்ராஜ் அவர்கள் தலைமையில் இறை வணக்கத்துடன் இனிதே துவங்கியது.

உறுப்பினர்கள் அறிமுகத்திற்கு பின்னர் கிளையின் செயலாளர் பொறி. R.S. சுந்தரம் அவர்கள் வரவேற்புரையாற்றினார். அதனை தொடர்ந்து ஓய்வு பெற்ற உதவி செயற்பொறியாளர் பொறி. B.குணதரன் அவர்களை பாராட்டி பொன்னாடை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. மையச் சங்க மாநில துணைத்தலைவர் திரு.S. பாஸ்கரன் அவர்கள் திருநெல்வேலியில் 08.08.2015 மற்றும் 09.08.2015 ஆகிய தேதிகளில் நடைபெற்ற நமதுமையசங்கத்தின் பொதுக்குழுக்கூட்ட நிகழ்வுகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் அனைவருக்கும் நூற்றாண்டு விழா குறுந்தகடுகள் வழங்கப்பட்டது.

பின்னர் இக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பட்டயம் பெற்ற பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் / இளநிலை வரை தொழில் அலுவலர் பதவியை விரைந்து பெற்றுதர உரிய நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.
2. விடுப்பட்ட உதவிபொறியாளர் / இளம்பொறியாளர்களின் பணிவரன்முறையினை உடனடியாக பெற்றுதர இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
3. தற்போது நான்கு ஆண்டுகள் தொழில் நுட்ப உதவியாளர் பதவியில் பணிமுடித்தவர்களுக்கு இளநிலைப்பொறியாளர் பதவியினை விரைந்து பெற்றுதர இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.
4. தற்பொது இளநிலைப் பொறியாளர் / உதவிப்பொறியாளர் பிரிவு அளவில் பணிச்சுமை அதிகமாக உள்ளதால் பிரிவுக்கு ஒரு தொழில் நுட்ப உதவியாளர் பணியமர்த்த உரிய ஆணைகள் பெற்றுத்தர மையச்சங்கத்தினை இப்பொதுக்குழு கேட்டுக்கொள்கிறது.

கிளைச் சங்கத்தின் செயலாளர் பொறி. R.S. சுந்தரம் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.



# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர் வணக்கம்!

சுபஸ்ரீ நிகழும் மங்களகரமான மன்மத ஆண்டு கார்த்திகை மாதம் 6- ஆம் நாள் (22.11.2015) ஞாயிற்றுக்கிழமை ஏகாதசி திதி, உத்திரட்டாதி நட்சத்திரம் சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 8.15 மணிக்கு மேல் 9.15 மணிக்குள் தனுசு இலக்னத்தில்

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், O. சௌதாபுரம்,
தெய்வத்திரு. புதுவீடு P. ஆறுமுகமுதலியார் - அங்காயம்மாள் மகன் வழி பேரனும்
தருமபுரி. S. சிதம்பரம்- இருளாயி மகள் வழி பேரனும்
திரு A. செல்வராசு - முத்துராயி எங்களின் கனிஷ்ட குமாரன்
திருநிறைச்செல்வன்

**S. சரவணன்,** B.E.,
(Technology Lead, Infosys, USA)

காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம்,
தெய்வத்திரு.கிருபாநிதி முதலியார் - சந்திரவதனா அவர்களின் பேத்தியும்
சென்னை திரு.V.K. கருணாகரன் - காஞ்சனமாலா அவர்களின் கனிஷ்ட குமார்த்தி
திருநிறைச்செல்வி

**K. மோனிஷா,** B.E.,
(Quality Assurance Engineer, Fidelity, Chennai)

ஆகியோருக்கு திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, மேற்படி இத்திருமணம் தருமபுரி, **S.V ரோடு, ஓம் காளியம்மாள் திருமணமண்டபத்தில்** நடைபெறுவதால் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்பும் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்க அன்புடன் வேண்டுகிறோம்.

தங்கள் அன்புள்ள
**A. செல்வராசு, B.E.,**
உதவி செயற்பொறியாளர் (க) பொ.ப.து, தருமபுரி
தலைவர் TNEA தருமபுரி கிளை
திருமதி முத்துராயி செல்வராசு
**செல்வி. S. பிரியதர்ஷினி M.Tech., (Civil)**
**No. 54, ஓம் சக்தி இல்லம், அவ்வை நகர், தருமபுரி - 5.**
**செல்: 94435 10623, 9442280352**



# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான மன்மத வருடம் ஐப்பசி மாதம் 08- ஆம் தேதி (25.10.2015) ஞாயிற்றுக்கிழமை திரயோதசி திதியும், உத்திரட்டாதி நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் அன்று காலை 10.35 மணிக்கு மேல் 11.15 மணிக்குள் தனுசு லக்னத்தில் சுபவேளையில்

உசிலை, தெய்வத்திரு P. குருசாமி நாடார் - G. பொன்னுத்தாய் அம்மாள் அவர்களின் மகன் வழிப் பேத்தியும், ஸ்ரீவில்லிபுத்தூர், தெய்வத்திரு V. காண்டீபன் நாடார் - K. ஆதிலட்சுமி அம்மாள் அவர்களின் மகள் வழிப் பேத்தியும், எங்களது புதல்வியுமான

திருவளர்ச்செல்வி

**P. ரேவதி,** B.E.,

(Software Engineer, Infosys, Chennai)

மதுரை, தெய்வத்திரு M. சோலையப்ப நாடார் - S. தேனம்மாள் அவர்களின் மகன்வழிப் பேரனும், தெய்வத்திரு A. அய்யக்குட்டி நாடார் - A. புஷ்பவள்ளி அவர்களின் மகள் வழிப் பேரனும், திரு. S.இன்பராஜ் - I. புவனேஸ்வரி அவர்களின் புதல்வனுமாகிய

திருவளர்ச்செல்வன்

**I. மதன்ராஜ்,** M.B.A.,

(Deputy Manager, H.D.F.C Bank, Chennai)

இவர்களது திருமணம் பெரியோர்களால் நிச்சயிக்கப்பெற்று, மேற்படி வைபவம் மதுரை, திருப்பரங்குன்றம் **ஷீலா கிருஷ்ணமூர்த்தி திருமணமஹாலில்** நடைபெறுவதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஆசீர்வதிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள
Er. கு. பெருமாள், B.E.,
உதவி செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை,
பெ. நளாயினி B.A.,
பெ. இராம்பிரசாத் B.Tech.,
திருமங்கலம்.
கைபேசி எண்: 98650 96431

# கடலூர் கிளை பொதுக்குழுக் கூட்ட நிகழ்வுகள்






Under Postal Regd No. TN/CH/(C)/358/15-17 & WPP LICENCE NO.TN/PMG (CCR) WPP No.308/2015-17Date of Posting 5th of Every Month. R.N.I. Registration No.R.33590/78.

November 2015

# மாநிலச் செயற்குழுக் கூட்டம்

நாள் : 19.12.2015, சனிக்கிழமை
காலை 10.30 மணி

இடம் : புதுக்கோட்டை

மையச் சங்க பொறுப்பாளர்கள், கிளைச் சங்க பொறுப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் ஆகியோர் கூட்டத்தில் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொறி. எஸ். கண்ணன்
- செயலாளர் அமைப்பு மற்றும் சட்டம்

நமது சங்கத்தின் Website : www. tnengga. org
email id : tneapwd@yahoo.co.in

தந்தி பொறியாளர்
தொலைபேசி : சங்கம் : 28525786
இல்லம் : 28551993

பொறியியல் கதிர்
PORIYIYAL KADHIR

அனுப்புநர்:
தமிழ்நாடு பொறியியல் சங்கம்
சேப்பாக்கம், சென்னை - 600 005.
முகவரி சரியில்லையேல் திருப்பி அனுப்பவும்

Published on 03-11-2015
Postng on 05-11-2015

REGD. NEWS PAPER
POSTED AT EGMORE RMS1/ PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM

பெறுநர்

EDITED BY:Er. D. MURUGESAN, D.C.E, B.Tech, M.Tech, GENERAL SECRETARY, TNEA, PWD, CHEPAUK, CHENNAI-5
PUBLISHED BY: Er. K. KAMALDEEN, D.C.E. B.E., PUBLICATION SECRETARY, T.N.E.A, PWD, CHEPAUK, CHENNAI-5.
PRINTED BY: Mr. J. VINOTH, AALAYAM ART PRINTERS, NO.5, HAJ HUSSAIN STREET, ICE HOUSE, CHENNAI-14. PH: 94440 75312